# அவர் நமக்கு தீர்க்கதரிசிகளைக் கொடுத்தார்

**பாடம் 4**

## உடன்படிக்கைகளின் இயக்கவியல்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை .......... 1

உடன்படிக்கை இலட்சியங்கள் .......... 1

- உடன்படிக்கை கட்டமைப்புகள் .......... 2
- தீர்க்கதரிசன ஊழியம் .......... 7

உடன்படிக்கை நியாயத்தீர்ப்பு .......... 9

- தீர்ப்பின் வகைகள் .......... 10
  - இயற்கையில் நியாயத்தீர்ப்பு .......... 10
  - போரில் நியாயத்தீர்ப்பு .......... 11
- தீர்ப்பின் செயல்முறை .......... 12
  - தெய்வீக பொறுமை .......... 13
  - அதிக தீவிரம் .......... 14
  - குறிப்பிட்ட இறுதிக்கட்டம் .......... 15

உடன்படிக்கை ஆசீர்வாதங்கள் .......... 16

- ஆசீர்வாதங்களின் வகைகள் .......... 17
  - இயற்கையில் ஆசீர்வாதம் .......... 17
  - போரில் ஆசீர்வாதம் .......... 18
- ஆசீர்வாதங்களின் செயல்முறை .......... 20
  - கிருபை .......... 20
  - அளவுகள் .......... 21
  - இறுதிக்கட்டம் .......... 22

முடிவுரை .......... 24

# முன்னுரை

மனித உறவுகளுக்குள் ஏற்ற தாழ்வுகள் இருப்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? நட்பு சில நேரங்களில் சுவாரஸ்யமாகவும், மற்ற நேரங்களில் சுவாரஸ்யமில்லாமலும் இருக்கும். சில நேரங்களில் அவை பாதுகாப்பானவை, மற்ற நேரங்களில் பாதுகாப்பற்றவை. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் தேவன் தம்முடைய ஜனங்களோடு செய்த உடன்படிக்கையின் தூதுவர்களாக இருந்தார்கள் என்று முந்தைய பாடங்களில் பார்த்தோம், இந்த தூதுவருடைய செயல்பாட்டை புரிந்து கொள்ள, இஸ்ரவேலுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவானது அதன் ஏற்ற தாழ்வுகளைக் கொண்டிருந்தது என்பதை தீர்க்கதரிசிகள் உணர்ந்தார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அத்தியாயத்திற்கு "உடன்படிக்கைகளின் இயக்கவியல்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடத்தில், நாம் மூன்று வெவ்வேறு காரியங்களைப் பார்க்கப் போகிறோம்: முதலாவதாக, உடன்படிக்கையின் இலட்சியங்களை ஆராய்வோம். இரண்டாவதாக, மக்கள் தெய்வீக நியாயத்தீர்ப்பின் கீழ் விழுந்தபோது தீர்க்கதரிசிகள் தேவனின் சார்பாக எவ்வாறு ஊழியம் செய்தார்கள்? என்கிற உடன்படிக்கை நியாயத்தீர்ப்பை ஆராய்வோம். பின்னர் மூன்றாவதாக, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வழங்கிய ஆசீர்வாதங்களைப் பற்றி தீர்க்கதரிசிகள் எவ்வாறு பேசினார்கள்? என்கிற உடன்படிக்கை ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறோம். உடன்படிக்கை வாழ்க்கையின் இந்த இயக்கவியலைப் புரிந்துகொள்வது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தையும், அது இன்றைய திருச்சபைக்கும் உலகத்திற்கும் எவ்வாறு பொருந்துகிறது என்பதையும் புரிந்துகொள்ள நமக்கு உதவும். தேவனுடனான உடன்படிக்கை வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்கள் யாவை?

# உடன்படிக்கை இலட்சியங்கள்

நீங்கள் எப்பொழுதாவது ஒரு திருமணத்திற்குப் போய், "நோயிலும் ஆரோக்கியத்திலும், ஐசுவரியத்திலும் ஏழ்மையிலும் இணைந்திருப்போம்" என்று மணமகனும் மணமகளும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எல்லா அதிசயமான காரியங்களையும் கேட்டிருக்கிறீர்களா? மணமகனும் மணமகளும் தங்கள் திருமணங்களை சாதாரண உறுதிமொழிகளுடன் தொடங்குவதைக் கேட்பது விசித்திரமாக இருக்கும் அல்லவா? அந்த மணமகன் அந்தப் பெண்ணிடம், "நான் உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் நீ நோய்வாய்ப்பட்டால் உன்னோடு வாழ்வது கடினமாயிருக்கும்" என்று சொல்லக் கேட்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அல்லது அந்தப் பெண் அந்த மணமகனிடம், "நான் உம்மை என் கணவனாக ஏற்றுக்கொள்வேன், ஆனால் நாம் ஏழையாக இருக்க நீர் விடாமல் இருப்பதே நல்லது" என்று சொல்வதை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? திருமண நாளில் ஒருவருக்கொருவர் அப்படி பேசினால் அந்த தம்பதிகளுக்கு என்ன ஆயிற்று என்று நாம் ஆச்சரியப்படுவோம், ஏனென்றால் திருமணத்தின் ஆரம்பம் இலட்சியங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இது ஒரு புதிய உறவாகும். விஷயங்கள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கும் காலம் இது. உறவு சிறந்ததாக இருந்தபோது தம்பதியினர் ஒருவருக்கொருவர் சொன்ன விஷயங்களை நினைவில் வைத்திருப்பார்கள் என்று நாம் அனைவரும் நம்புகிறோம்.

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான உறவு இப்படித்தான் இருந்தது என்று அறிந்திருந்தார்கள். தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான உடன்படிக்கை உறவில் சில இலட்சியங்கள் இருந்தன என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். இப்போது இந்த இலட்சிய உறவைப் புரிந்து கொள்ள, நாம் இரண்டு பாடங்களைப் பார்க்க வேண்டும்; அவையாவன: முதலாவது, அடிப்படை இலட்சிய உடன்படிக்கை கட்டமைப்புகள்; பின்னர் இரண்டாவதாக, தீர்க்கதரிசன ஊழியங்கள், அல்லது தீர்க்கதரிசிகள் இந்த கட்டமைப்புகளை எவ்வாறு சார்ந்திருந்தனர் என்பதாகும்.

## உடன்படிக்கை கட்டமைப்புகள்

முந்தைய பாடங்களில், பழைய ஏற்பாடு இஸ்ரவேலுடனான தேவனுடைய உடன்படிக்கைகளை விவரிக்கிறது, அவை பண்டைய கிழக்கில் பேரரசர்-சிற்றரசர் உடன்படிக்கைகளை மாதிரியாகக் கொண்டுள்ளன என்று பார்த்தோம். பழைய ஏற்பாட்டின் காலங்களில், பெரிய பேரரசர்கள் சிறிய நாடுகளுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களில் நுழைவார்கள், மேலும் இஸ்ரவேல் தேசத்துடன் கர்த்தர் அத்தகைய உடன்படிக்கையில் நுழைந்தார் என்று வேதம் கூறுகிறது. பேரரசர்கள் முதன்முதலில் தங்கள் அடிமை நாடுகளுடன் உடன்படிக்கை ஒப்பந்தங்களில் நுழைந்தபோது, அவர்கள் தங்கள் அரசியல் ஏற்பாடுகளின் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கி சில இலட்சியங்களை அறிவிப்பதன் மூலம் தொடங்கினர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலாதிக்க-சிற்றரசர் ஒப்பந்தங்களில் குறைந்தது இரண்டு கூறுகள் எப்போதும் தோன்றும். முதலாவதாக, பண்டைய கிழக்கத்திய உடன்படிக்கைகள் பேரரசர் தமது சிற்றரசர்களிடம் கருணை காட்டுவதை எப்போதும் உறுதிப்படுத்தின. அவர்கள் பெரிய ராஜாவின் பெயரை அறிவித்து, ராஜா தன் மக்களுக்கு செய்த அனைத்து பெரிய காரியங்களையும் பட்டியலிட்ட ஒரு வரலாற்று விவரத்துடன் தொடங்கினர். உடன்படிக்கைகள் எப்போதும் பேரரசரின் தயவை அடிப்படையாகக் கொண்டவை, பேரரசரினுடைய கருணையின் இந்த கருப்பொருள் வேதத்தின் உடன்படிக்கை இலட்சியத்திற்கும் பொருந்தும். வேதத்தில் உள்ள ஒவ்வொரு தெய்வீக உடன்படிக்கையின் மையமும் தம்முடைய ஜனங்கள் மீதான தேவனுடைய தயவாக இருந்தது.

உடன்படிக்கைகளின் இலட்சியங்களில் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாத மற்றொரு அம்சம் உள்ளது, அது மனித பொறுப்பாகும். பண்டைய உலகில் ஒவ்வொரு மேலாதிக்க-சிற்றரசர் உடன்படிக்கையிலும் சிற்றரசரிடம் விசுவாசம் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு உடன்படிக்கையிலும் தேவனுடைய மக்களிடமிருந்து விசுவாசம் எதிர்பார்க்கப்பட்டது. விசுவாசமாக இருப்பது என்பது மக்கள் தேவனுடைய தயவுக்கு பதில் சொல்வதாகும். தேவனுக்கு முன்பாக நிற்கக்கூடிய அந்தஸ்தை மக்கள் சம்பாதிக்கவில்லை. தேவன் தம்முடைய கிருபையின் அடிப்படையில் தம்முடைய ஜனங்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். ஆனால் விதிவிலக்கு இல்லாமல், உடன்படிக்கைகளின் இலட்சியங்கள் எப்போதும் மனிதனுடைய பொறுப்பை வலியுறுத்துகின்றன. அதாவது, தேவனுக்கு முன்பாக உண்மையாக வாழ வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன.

இந்த கட்டத்தில், இந்த இலட்சிய கூறுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையிலும் எவ்வாறு நுழைகின்றன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நாம் முந்தைய பாடங்களில் பார்த்தபடி, தேவன் ஐந்து உடன்படிக்கை உறவுகளுக்குள் நுழைந்தார் என்பதை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் புரிந்துகொண்டனர். அவர் ஆதாம் மற்றும் நோவா மூலம் பூமியின் அனைத்து தேசங்களுடனும் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். பின்னர் அவர் ஆபிரகாம், மோசே மற்றும் தாவீதுடன் ஏற்படுத்தின உடன்படிக்கைகள் மூலம் இஸ்ரவேலை ஒரு விசேஷித்த உறவுக்குள் அழைத்தார், அத்துடன் சிறையிருப்புக்குப் பிறகு புதிய உடன்படிக்கையையும் ஏற்படுத்தினார்.

ஆதாமுடன் செய்த உடன்படிக்கையைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவும். ஆதாமின் நாட்களில், தேவனுடைய கருணை அவர் மனிதகுலத்திற்கான உலகத்தை உருவாக்கிய விதத்தில் வெளிப்பட்டது. அவர் வாழத் தகுதியற்ற, குழப்பமான ஒரு உலகத்தை, மனிதகுலம் வசிக்க வேண்டிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு அற்புதமான தோட்டமாக வடிவமைத்தார். ஆதியாகமம் 1:2 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதியாகமம் 1:2).

பின்பு தேவன் தம்முடைய சாயலுக்கு ஒரு பரதீசை உண்டாக்கி, ஆதாமையும் ஏவாளையும் அந்தப் பரதீசுக்குள் வைத்தார். இந்த இரக்கத்தின் அடிப்படையில்தான் தேவன் நம்முடைய முதல் பெற்றோரான ஆதாம் மற்றும் ஏவாளுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அதே நேரத்தில், ஆதாமுடனான உடன்படிக்கை இலட்சியத்தில் மனித பொறுப்பும் தேவைப்பட்டது. தேவன் ஆதாமை அற்புதமான ஏதேன் தோட்டத்தில் வைத்தார், ஆனால் அவர் உடனடியாக கடுமையான நிபந்தனைகளை முன்வைத்தார். ஆதியாகமம் 2:16-17 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்; ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதியாகமம் 2:16-17).

பரதீசில் கூட, உடன்படிக்கையின் இலட்சியமானது தேவனுடைய கருணையை மட்டுமல்ல, மனித இனத்தின் பொறுப்பையும் உள்ளடக்கியது.

நோவாவுடன் செய்த உடன்படிக்கையைக் குறித்ததிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. ஒருபுறம், நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் தேவன் இரக்கத்தோடு உலகளாவிய ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றினார். ஆதியாகமம் 6:7-8 இவ்வாறு கூறுகிறது:

> அப்பொழுது கர்த்தர்: "நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன்" என்றார். நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதியாகமம் 6:7-8).

நோவாவுடனான உடன்படிக்கை தகுதிக்கு மேலான, தெய்வீக இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அப்படியிருந்தும், நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கை தெய்வீக தயாளத்தையும் தயவையும் மனித



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பொறுப்புடன் இணைக்கிறது. ஜலப்பிரளயத்திற்குப் பிறகு நோவா பேழையிலிருந்து வெளியே வந்தபோது, தேவன் பல வெளிப்படையான நிபந்தனைகளை முன்வைத்தார். ஆதியாகமம் 9:7-ல், தேவன் நோவாவுக்கு அவருடைய அடிப்படை மனித பொறுப்பையும் நினைவூட்டினார்:

> நீங்கள் பலுகிப் பெருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விருத்தியாகுங்கள் என்றார் (ஆதி 9:7).

தெய்வீக இரக்கம் மற்றும் மனித பொறுப்பு இரண்டும் நோவாவுடனான உடன்படிக்கையில் தோன்றுகின்றன.

இப்பொழுது தேவன் இஸ்ரவேல் தேசத்துடன் செய்த விசேஷித்த உடன்படிக்கைகளுக்கு ஒரு கணம் திரும்புவோம். இஸ்ரவேலுடனான முதல் உடன்படிக்கை பிதாவாகிய ஆபிரகாம் மூலமாக இருந்தது என்பதை நீங்கள் நினைவுகூரலாம். பூமியிலுள்ள எல்லா குடும்பங்களுக்கும் மேலாக ஆசீர்வதிக்கப்பட இந்த ஒரு குடும்பத்தை தேவன் தெரிந்துகொண்டதால் தேவனுடைய கிருபை இந்த உடன்படிக்கையில் தோன்றுகிறது. ஆதியாகமம் 12:2-3ல் ஆபிரகாமுக்கு இந்த வார்த்தைகளை தேவன் சொன்னபோது அவர் மீது மிகுந்த இரக்கம் காட்டினார்:

> நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து; உன் பேரைப் பெருமைப் படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:2-3).

மீண்டும், தெய்வீக கிருபையானது உடன்படிக்கை இலட்சியத்தின் மைய உறுப்பாக இருந்தது. ஆயினும்கூட, ஆபிரகாமினுடைய உடன்படிக்கை இலட்சியத்தின் இன்றியமையாத பகுதியாக மனித பொறுப்பும் இருந்தது. முற்பிதாக்களின் பொறுப்பு பல சந்தர்ப்பங்களில் முன்னணிக்கு வருகிறது. உதாரணமாக, ஆதியாகமம் 17:1-2 இல், தேவன் இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்:

> நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் (ஆதியாகமம் 17:1-2).

ஆபிரகாமிய உடன்படிக்கையில் மனித பொறுப்பும் அடங்கியிருந்தது.

மோசேயுடனான தேவனுடைய உடன்படிக்கைக்கு வரும்போது, இன்று அநேக கிறிஸ்தவர்கள் ஒரு தவறான புரிதலைக் கொண்டிருக்கிறார்கள். இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கை கிரியைகளை மையமாகக் கொண்டது என்று அவர்கள் நம்புகிறார்கள், ஆனால் அது உண்மையல்ல. பண்டைய கிழக்கத்திய மேலாதிக்க ஒப்பந்தங்களின் முன்னுரைகளைப் போலவே பத்துக் கட்டளைகள் ஒரு வரலாற்று முன்னுரையுடன் தொடங்குகின்றன என்ற உண்மையில் இதை நாம் தெளிவாகக் காணலாம். எந்த கட்டளையும் கொடுக்கப்படுவதற்கு முன் யாத்திராகமம் 20:2 இல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே (யாத்திராகமம் 20:2).

தம்முடைய ஜனங்கள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தார், அவரது இரக்கத்தின் அடிப்படையில் எகிப்து தேசத்திலிருந்து அவர்களை கொண்டு வந்தார். மோசேயுடனான உடன்படிக்கையில் மனித பொறுப்பின் மறுபக்கமும் உண்மையில் தோன்றுகிறது. யாத்திராகமம் 19:5 இஸ்ரவேலுக்கு இந்த வார்த்தைகளைக் கூறுகிறது:

> இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் (யாத்திராகமம் 19:5–5).

மோசேயுடனான உடன்படிக்கையின் சிறந்த கட்டத்தில் தெய்வீக கிருபை மனித பொறுப்புடன் இணைக்கப்பட்டது.

தாவீதுடனான ராஜ உடன்படிக்கையும் தெய்வீக தயாளத்தின் மீது கவனம் செலுத்தியது. 2 சாமுவேல் 7:8 இல் தாவீதுடன் தேவன் இவ்வாறு கூறுகிறார்:

> நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையைவிட்டு எடுத்தேன் (2 சாமுவேல் 7:8).

தேவன் தாவீதின் குடும்பத்தை தம்முடைய ஜனத்தின் மீதான அன்பின் காரணமாக நிரந்தர வம்சமாக தேர்ந்தெடுத்தார், தாவீதிடம் அவர் கண்ட ஏதோ ஒரு தகுதியின் காரணமாக அவர் அதை செய்யவில்லை. தாவீதின் வம்சம் நிறுவப்பட்டது, ஏனென்றால் தேவன் அவர் மீது கருணையாக இருந்தார். அதே நேரத்தில், தேவன் தாவீதுக்கு இந்த கிருபையைக் கொடுத்ததால் அவரிடமிருந்து விசுவாசத்தை எதிர்பார்த்தார். சங்கீதம் 89:30-32-ல் விசுவாசவாக இருப்பதன் அவசியத்தை கவனிக்கவும்:

> அவன் பிள்ளைகள் என் நியாயங்களின்படி நடவாமல், என் வேதத்தை விட்டு விலகி; என் கட்டளைகளைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கைக்கொள்ளாமல், என் நியமங்களை மீறிநடந்தால்; அவர்கள் மீறுதலை மிலாற்றினாலும், அவர்கள் அக்கிரமத்தை வாதைகளினாலும் தண்டிப்பேன் (சங்கீதம் 89:30-32).

தேவன் அவர்களுக்கு கிருபை அளித்ததால் தாவீதின் குமாரர் தனக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்.

மேசியாவின் மூலமாக வரும் என்று தீர்க்கதரிசிகளால் கணிக்கப்பட்ட உடன்படிக்கை இலட்சியத்தின் இரண்டு பக்கங்களும் புதிய உடன்படிக்கையில் தோன்றுகின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் இதை எபேசியர் 2:8-10 இல் சுருக்கமாக கூறியிருக்கிறார்.

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8-9).

கிருபை கிறிஸ்துவில் உள்ள உடன்படிக்கையின் அடிப்படையாகும். ஆனால் இப்போது 10 வது வசனத்தில் வரும் வார்த்தைகளை கவனிக்கவும்:

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபேசியர் 2:10).

புதிய உடன்படிக்கையின் இலட்சியத்தில் நற்கிரியைகளுக்கான மனித பொறுப்பும் அடங்கும்.

இந்த கட்டத்தில், தீர்க்கதரிசிகள் எவ்வாறு இந்த உடன்படிக்கை கட்டமைப்புகளில் நம்பிக்கை வைத்தார்கள் என்கிற நமது இரண்டாவது தலைப்புக்கு நம் கவனத்தை திருப்ப வேண்டும்.

## தீர்க்கதரிசன ஊழியம்

ஒருபுறம், தீர்க்கதரிசிகள் கர்த்தர் அவர்களுக்குக் காட்டிய இரக்கங்களை தேவனுடைய ஜனங்களுக்கு இடைவிடாமல் நினைவுபடுத்தினர். அதே நேரத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் உடன்படிக்கையில் மனித பொறுப்பில் தங்கள் கவனத்தை அதிகப்படுத்தினர். மக்களை அணுகவும், விசுவாசமாக சேவை செய்வதன் அவசியத்தை அவர்களுக்கு நினைப்பூட்டவும் அவர்கள் தேவனால் அழைக்கப்பட்டனர். இஸ்ரவேலின் காணக்கூடிய சமூகத்திற்குள் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் இருப்பதை தீர்க்கதரிசிகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிந்திருந்தனர் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த காரணத்திற்காக, அவர்கள் மனித பொறுப்பை உடன்படிக்கையில் ஒரு சோதனை அல்லது நிரூபிக்கும் களமாக நடத்தினர். நிபந்தனைகளுக்கு மக்கள் பதிலளித்த விதமானது அவர்களுடைய இருதயங்களின் உண்மையான தன்மையைக் காட்டியது.

ஒருபுறம், கண்ணுக்குத் தெரியும் சமூகத்திற்குள் உள்ள அவிசுவாசிகள் அவர்களிடம் இரட்சிக்கிற விசுவாசம் இல்லை என்பதைக் காட்டினர் ஏனென்றால் அவர்கள் தங்கள் உடன்படிக்கையின் பொறுப்புகளிலிருந்து விலகிச் செல்கிறவர்களாக இருந்தார்கள். அவர்கள் இரட்சிப்புக்காக கர்த்தரை நம்பத் தவறி, தங்கள் விசுவாசத்தை அவருக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். வெளிப்படையாக உடன்படிக்கையை மீறுபவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள். மறுபுறம், மனித பொறுப்பின் சோதனை கண்ணுக்கு தெரியாத உடன்படிக்கை சமூகத்திற்குள் உண்மையாக இருந்தவர்களையும் அடையாளம் கண்டது. இவர்கள் நித்தியமாக மீட்கப்பட்ட மக்கள். அவர்கள் கர்த்தரில் இரட்சிக்கும் விசுவாசத்தைக் கொண்டிருந்தார்கள், அவர்கள் நித்திய ஜீவனுக்கான வழியில் இருந்தார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், பல முறை தீர்க்கதரிசிகள் புதிய ஏற்பாட்டைப் போலவே தங்கள் விசுவாசத்தை நிரூபிக்க இந்த மக்களுக்கு சவால் விடுத்தனர். வெளிப்படுத்தின விசேஷம் 2:7 இன் வார்த்தைகளை கவனிக்கவும்:

> ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது (வெளிப்படுத்தின விசேஷம் 2:7).

நமக்கு உண்மையிலேயே இரட்சிக்கும் விசுவாசம் இருப்பதை நிரூபிக்க நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற இந்த வகையான கருப்பொருள் தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதும் பரவியிருக்கும் ஒரு கருப்பொருளாகும்.

தீர்க்கதரிசிகள் மனித பொறுப்பை வலியுறுத்தியதால் அவர்கள் சட்டபூர்வமானவர்கள் என்று நினைக்கக்கூடாது என்பதில் இப்போது நாம் கவனமாக இருக்க வேண்டும். கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தின் ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் தேவனுடைய கிருபை இருந்தது என்பதை தீர்க்கதரிசிகள் புரிந்துகொண்டார்கள் என்பதே உண்மை. ஜனங்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்போதெல்லாம், கர்த்தருடைய ஆவியானவர் அவர்களுக்குள் கிரியை செய்கிறார் என்று வேதத்தின் முழு போதனையிலிருந்தும் நாம் அறிவோம். அதேசமயம், கீழ்ப்படிவது நமது பொறுப்பு என்று வேதம் தொடர்ந்து நமக்கு நினைப்பூட்டுகிறது. கீழ்ப்படிதலின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் தேவனுடைய கிருபை இருப்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்ததால், தேவனுடைய மக்களை கீழ்ப்படிதலுக்கும் விசுவாசத்திற்கும் அழைக்க அவர்கள் தயங்கவில்லை.

உடன்படிக்கைகளின் இயக்கவியல் பற்றிய நமது ஆய்வில், இதுவரை உடன்படிக்கை இலட்சியத்தின் இரண்டு பக்கங்களையும் பார்த்தோம். இந்த கட்டத்தில், நமது இரண்டாவது தலைப்பான உடன்படிக்கை நியாயத்தீர்ப்புக்கு நமது கவனத்தை திருப்ப வேண்டும். தேவனுடைய ஜனங்கள் கர்த்தருக்கான சேவையிலிருந்து விலகியபோது உடன்படிக்கை வாழ்க்கையின் இயக்கவியல் என்னவாக இருந்தது?

# உடன்படிக்கை நியாயத்தீர்ப்பு

உலகம் முழுவதும் பல வகையான மனித அரசாங்கங்கள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு மனித அரசாங்கத்திடமும் பொதுவான விஷயம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால் தேசத்தின் மக்கள் தங்கள் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய மாட்டார்கள் என்பதால் அவர்கள் குற்றம் மற்றும் தண்டனையின் ஒரு அமைப்பை நிறுவுகிறார்கள் என்பதை அவர்கள் அனைவரும் அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேலோடு தேவன் செய்த உடன்படிக்கையிலும் இதே வகையான காரியம் உண்மையாயிருந்தது. தம்முடைய ஜனங்கள் பாவிகள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர்கள் தனக்கு எதிராகக் கலகம் செய்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார், ஆகவே அவர் தம்முடைய ஜனத்தின்மீது நியாயத்தீர்ப்பு வழங்கும் ஒரு ஒழுங்குமுறையையும் ஏற்படுத்தினார். இந்த தீர்ப்பு அமைப்பில் தீர்க்கதரிசிகள் மிக முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் உடன்படிக்கையின் தூதுவர்களாக இருந்தனர். அவர்கள் குற்றங்களை நினைவுக்குக் கொண்டுவந்தனர், மேலும் தம்முடைய ஜனங்கள் தம்முடைய உடன்படிக்கையை மீறினால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளைப் பற்றியும் அவர்கள் எச்சரித்தனர். தீர்க்கதரிசிகள் நியாயத்தீர்ப்பின் தூதுவர்களாக எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ள, தேவன் தம்முடைய ஜனங்கள் மீது வைத்திருந்த உடன்படிக்கை நியாயத்தீர்ப்பின் இரண்டு கூறுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, தீர்க்கதரிசிகள் அறிவித்த தீர்ப்புகளின் வகைகளை ஆராய்வோம், இரண்டாவதாக, இந்த தீர்ப்புகள் பின்பற்றும் செயல்முறையை ஆராய்வோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனுடன் செய்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறியவர்களுக்கு எதிராக பயமுறுத்திய நியாயத்தீர்ப்புகளின் வகைகளை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தீர்ப்பின் வகைகள்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நியாயத்தீர்ப்பு வகைகளைக் கண்டுபிடிக்கவில்லை என்பதை உணர வேண்டியது மிகவும் முக்கியம். மாறாக, தேவனுடைய ஜனங்கள் எதிர்பார்க்க வேண்டிய நியாயத்தீர்ப்புகளின் பட்டியல்களுக்காக அவர்கள் பழைய ஏற்பாட்டின் வேதாகமத்தை நோக்கிப் பார்த்தார்கள். அவர்கள் பெரும்பாலும் மோசேயின் புத்தகங்களிலிருந்து வரும் பகுதிகளைச் சார்ந்திருந்தனர் என்பதை அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய மக்களுக்கு எதிராக வரவிருக்கும் நியாயத்தீர்ப்புகளின் வகைகளை பட்டியலிட்டபோது தீர்க்கதரிசிகளை வழிநடத்திய ஐந்து முக்கிய பகுதிகள் உள்ளன: உபாகமம் 4:25-28, உபாகமம் 28:15-68, உபாகமம் 29:16-29 மற்றும் உபாகமம் 32:15-43. இறுதியாக லேவியராகமம் 26:14-39 ஆகியவை தீர்க்கதரிசிகளுக்கு தகவல்களை வழங்கின, ஏனெனில் அவர்கள் தேவன் தம்முடைய மக்களுக்கு எதிராக கொண்டுவரும் நியாயத்தீர்ப்புகளின் வகைகளைப் புரிந்துகொள்ள முயன்றனர். இந்த பகுதிகளில் அவ்வளவு அதிகமான அர்த்தம் இருப்பதால் அவை சொல்வதை சுருக்கமாகக் கூறுவது கடினம். ஆனால், உடன்படிக்கைக்கு இரண்டு அடிப்படை பிரிவுகள் இருந்தன என்பதை தேசத்திற்கு உணர்த்தவே மோசே இந்தப் பகுதிகளை எழுதினார் என்று நாம் சொல்லலாம்.

## இயற்கையில் நியாயத்தீர்ப்பு

உடன்படிக்கை நியாயத்தீர்ப்பின் முதல் வகை என்னவென்றால், தொடர்ச்சியான பாவத்திற்கு எதிராக தேவன் இயற்கையின் மூலம் தண்டனை தருவார் என்பதாகும். தேவன் தமது ஆசீர்வாதத்தை இயற்கை ஒழுங்கிலிருந்து அகற்றுவதாக அச்சுறுத்துகிறார், இதனால் உலகம் தேவ மக்களுக்கு விரோதமாக மாறும். தேவன் இஸ்ரவேலை பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்திற்கு கொண்டு வந்தார் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் இயற்கையான ஒழுங்கு தேவனுடைய ஜனங்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கப்போகிறது. ஆனால் இஸ்ரவேலர் கலகம் செய்யும்போது, அவர் இந்த ஆசீர்வாதத்தை நியாயத்தீர்ப்பின் மூலம் நீக்கிவிடுவார் என்று தீர்க்கதரிசிகள் எச்சரித்தனர். என்ன மாதிரியான இயற்கை தீர்ப்புகள் காணக்கூடிய உடன்படிக்கை சமூகத்திற்கு எதிராக வரும்? உபாகமம் 4, 28, 29 மற்றும் 32 மற்றும் லேவியராகமம் 26 ஆகியவை தேவனுடைய மக்களுக்கு எதிரான குறைந்தது ஆறு முக்கிய வகையான இயற்கை நியாயத்தீர்ப்புகளை பட்டியலிடுகின்றன. முதலில், தேவன் சில சமயங்களில் இஸ்ரவேல் தேசத்திற்கு வறட்சியை அனுப்புவார் என்று மோசேயின் புத்தகங்களில் இருக்கிற இந்த அத்தியாயங்கள் நமக்கு கூறுகின்றன. இந்த வறட்சி தேசத்தை வறண்டுபோகச் செய்து, ஜனங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயங்கரமாக துன்பப்படுவார்கள், கொள்ளைநோய் உண்டாகும். பஞ்சமும் வரும், அதனால் மக்கள் கர்த்தருக்கு எதிராக வெளிப்படையாக கலகம் செய்யும்போது அவர்களுக்கு உணவு இருக்காது.
நோய் அவர்கள்மேல் வரும், அவர்கள் காய்ச்சலைப் பெறுவார்கள் கொப்புளங்கள் மற்றும் கட்டிகள் மற்றும் கொள்ளை நோய்கள் வரும். வன விலங்குகளால் மனித உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு மக்கள் தொகை இழப்பு ஏற்படும். வாக்குத்தத்த தேசத்தில் மலட்டுத்தன்மை மற்றும் அகால மரணம் ஆகியவை விலங்குகள் மற்றும் மனித எண்ணிக்கையை அழிக்கும்.

தீர்க்கதரிசிகள் இந்த வகையான உடன்படிக்கை நியாயத்தீர்ப்புகளை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அடிக்கடி வாக்குத்தத்த தேசத்தில் வாழ்க்கையை சீர்குலைக்க தேவன் சில இயற்கை பேரழிவைக் கொண்டுவரப் போகிறார் என்று எச்சரித்தார்கள். உதாரணமாக, ஆகாய் 1: 9-11-ல் தேவன் சொன்னதை கவனிக்கவும்:

> என் வீடு பாழாய்க்கிடக்கும்போது, நீங்கள் எல்லாரும் அவனவன் தன்தன் வீட்டிற்கு ஓடிப்போகிறீர்களே. ஆதலால் உங்கள்மேல் இருக்கிற வானம் பனியைப் பெய்யாமலும், பூமி பலனைக் கொடாமலும் போயிற்று. நான் நிலத்தின்மேலும், மலைகளின்மேலும், தானியத்தின்மேலும், புது திராட்சரசத்தின்மேலும், எண்ணெயின்மேலும், பூமியில் விளைகிற எல்லாவற்றின்மேலும், மனுஷரின்மேலும், மிருகங்களின்மேலும், கைப்பாடு அனைத்தின்மேலும் வறட்சியை வருவித்தேன் (ஆகாய் 1:9-11).

இயற்கை ஒழுங்கில் நியாயத்தீர்ப்பு வருகிறது என்று தேவன் அடிக்கடி தம்முடைய தீர்க்கதரிசிகளை அறிவிக்கச் செய்தார்.

## போரில் நியாயத்தீர்ப்பு

இயற்கையின் மூலமாக வருகிற நியாயத்தீர்ப்பு மட்டுமல்ல, போரின் மூலமாக வருகிற நியாயத்தீர்ப்பை தீர்க்கதரிசிகள் அறிவித்ததையும் நாம் காண்கிறோம். போர் அடிக்கடி பஞ்சம் மற்றும் நோய் போன்ற இயற்கை பயங்கரங்களைக் கொண்டுவருகிறது, ஆனால் தேவன் தம்முடைய மக்களுக்கு எதிராக மனித எதிரிகளை அனுப்புவதைப் பற்றியும் ஒரு வகையான உடன்படிக்கை நியாயத்தீர்ப்பாக பேசினார். மோசேயின் எழுத்துக்களில் பல போர் நோக்கங்கள் காணப்படுகின்றன. உபாகமம் 4,28,29,32 மற்றும் லேவியராகமம் 26 ஆகியவற்றில், குறைந்தது ஐந்து முக்கிய வகையான போர் நியாயத்தீர்ப்புகளை நாம் காண்கிறோம். முதலாவதாக, தேவனுடைய ஜனங்கள் தோல்வியை அனுபவிப்பார்கள். எதிரிகளின் தாக்குதல்களை அவர்களால் சமாளிக்க முடியாது. இரண்டாவதாக, முற்றுகைகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுடைய நகரங்களுக்கு எதிராக வைக்கப்படும். நகரங்கள் எதிரிகளால் சூழப்பட்டிருக்கும், அவற்றின் குடிமக்கள் துன்பப்படுவார்கள். அப்போது எதிரிகளால் தேசம் ஆக்கிரமிக்கப்படும். தேவனுடைய ஜனங்களின் எதிரிகள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் வந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள். மரணமும் அழிவும் போரில் மற்றொரு உடன்படிக்கை சாபமாகும், ஏனென்றால் தேவனுடைய மக்களில் பலர் தங்கள் எதிரிகளின் கைகளில் மடிவார்கள். இறுதியாக, எல்லாவற்றிலும் மோசமான சாபம் என்னவென்றால் தேவன் தம்முடைய ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்ட தேசங்களிடையே சிதறடிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்.

தேவனுடைய ஜனங்கள் தங்கள் எதிரிகளால் தோற்கடிக்கப்படுவார்கள் என்று தீர்க்கதரிசிகள் மீண்டும் மீண்டும் அறிவித்தது மட்டுமல்லாமல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து நாடுகடத்தப்படுவார்கள் என்றும் எச்சரித்தனர். உதாரணமாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து நிறைய யூதர்கள் நாடுகடத்தப்படுவார்கள் என்று மீகா தீர்க்கதரிசி எச்சரித்தார். மீகா 1:16 இல் சிறையிருப்பைக் குறித்த இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கலாம்:

> உனக்கு அருமையான உன் பிள்ளைகளினிமித்தம் நீ உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக்கொள்; கழுகைப்போல முழுமொட்டையாயிரு, அவர்கள் உன்னைவிட்டுச் சிறைப்பட்டுப்போகிறார்கள் (மீகா 1:16).

இது போன்ற நியாயத்தீர்ப்பு மற்றும் போர் பயமுறுத்தல்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதும் காணப்படுகின்றன.

ஆகவே, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் உடன்படிக்கை நியாயத்தீர்ப்பின் இரண்டு அடிப்படை வகைகளை அறிவித்தனர் என்று பார்க்கிறோம்; அவையாவன: இயற்கை பேரழிவுகள் மற்றும் போர். இந்த வகையான நியாயத்தீர்ப்புகளை தம்முடைய ஜனங்கள் மீது திணித்தபோது அவர் பின்பற்றப்போவதாக தேவன் சொன்ன செயல்முறையை இப்போது பார்ப்போம்.

## தீர்ப்பின் செயல்முறை

எந்த விதமான நியாயத்தீர்ப்பு செயல்முறைகள் நடக்கும் என்று தீர்க்கதரிசிகள் எதிர்பார்த்தார்கள்? தீர்க்கதரிசிகள் நியாயத்தீர்ப்பின் செயல்முறையை முதன்மையாக லேவியராகமம் 26:14-39 இலிருந்து கற்றுக்கொண்டனர். இந்த பத்தியில், மோசே நியாயத்தீர்ப்பு என்பது நீண்ட காலமாக நடைபெறும் ஒரு குறிப்பிட்ட மாதிரியைப் பின்பற்றுகிறது என்று விவரிக்கிறார். இந்த பத்தியை நாம் ஆராயும்போது, இந்த தீர்ப்புகள் வரும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முறையை நிர்வகிக்கும் குறைந்தது மூன்று கொள்கைகளை நாம் காண்போம். தேவன் பொறுமையைக் காண்பிப்பார், ஆனால் நியாயத்தீர்ப்புகள் கடுமையாய் அதிகரிக்கும், இந்த நியாயத்தீர்ப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட உச்சக்கட்டம் இருக்கும். தெய்வீக பொறுமையைப் பற்றி முதலில் சிந்திப்போம்.

## தெய்வீக பொறுமை

லேவியராகமம் 26:14-39 தேவன் தம்முடைய ஜனங்கள் பாவம் செய்யும்போது அவர்களிடம் மிகுந்த பொறுமையைக் காட்டுகிறார் என்பதை தெளிவுபடுத்துகிறது. தம்முடைய ஜனங்கள் கீழ்ப்படியாமல் போவார்கள் என்பதையும், அவர்கள் மனந்திரும்ப மறுப்பதில் பிடிவாதமாக இருப்பார்கள் என்பதையும் தேவன் அறிந்திருக்கிறார். எனவே, இந்த வேதப்பகுதியில், தேவன் தம்முடைய ஜனங்களிடம் மிகவும் பொறுமையாக இருப்பார் என்பதை மோசே வெளிப்படுத்துகிறார். லேவியராகமம் 26 ஐந்து முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது; அவையாவன: வசனங்கள் 14-17, 18-20, 21-22, 23-26 மற்றும் 27-39. இந்த பிரிவுகள் ஒவ்வொன்றும் தேவன் இதைச் சொல்வதிலிருந்து தொடங்குகின்றன: ”நான் சொல்வதை நீங்கள் கேட்கவில்லை என்றால்...” பின்னர் அவர் நியாயத்தீர்ப்பில் இஸ்ரவேலுக்கு என்ன செய்வார் என்று கூறுகிறார். ”நீங்கள் எனக்குச் செவிகொடாமற்போனால்” என்று திரும்பத் திரும்பச் சொல்வது, தம்முடைய ஜனங்களுக்கு மனந்திரும்புவதற்கான பல வாய்ப்புகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களிடம் பொறுமையாக இருக்க தேவன் விரும்பினார் என்பதைக் காட்டுகிறது.

தேவனுடைய பொறுமையைப் பற்றிய மிகச் சுருக்கமான விளக்கங்களில் ஒன்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்குள் தோன்றுகிறது. தீர்க்கதரிசி யோவேல் மனந்திரும்ப மக்களை அழைத்தபோது யோவேல் 2 ல் தேவனுடைய பொறுமையைப் பற்றி பேசினார். 2:13 இல் அவர் இஸ்ரவேலுக்கு இந்த வார்த்தைகளைக் கூறினார்:

> நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார் (யோவேல் 2:13).

தீர்க்கதரிசிகள் உடன்படிக்கை நியாயத்தீர்ப்பை மிகவும் வலுவாக நம்பினர், ஆனால் கர்த்தர் தம்முடைய மக்களுடன் மிகவும் பொறுமையாக இருந்தார் என்றும் அவர்கள் நம்பினர்.

லேவியராகமம் 26 இல் உடன்படிக்கை நியாயத்தீர்ப்பின் முதல் கொள்கை தேவன் பொறுமையாக இருப்பார் என்பதாகும். ஆனால் இரண்டாவது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொள்கையும் உள்ளது. அது என்னவென்றால், தேவனுடைய உடன்படிக்கை நியாயத்தீர்ப்புகள் அதிக தீவிரத்துடன் வரும் என்பதாகும்.

## அதிக தீவிரம்

லேவியராகமம் 26 இன் ஐந்து பகுதிகள் தேவன் பொறுமையுள்ளவர் என்று சொல்வதைப் போலவே, தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்புகளின் கடுமையையும் அதிகரிப்பார் என்றும் அவை நமக்குச் சொல்கின்றன. 18,21,24 மற்றும் 28 வசனங்களில், தேவன் தம்முடைய ஜனங்களை எச்சரிக்கிறார். அவர்கள் அவருக்கு எதிராக தொடர்ந்து கலகம் செய்தால், அவர் நியாயத்தீர்ப்புகளை ஏழு மடங்கு அதிகரிப்பார்.

லேவியராகமம் 26 இன் இந்த பரிமாணம் உடன்படிக்கை நியாயத்தீர்ப்பில் வருகிறது என்று நமக்குச் சொல்கிறது. சில சமயங்களில் தீர்க்கதரிசிகள் ஒப்பீட்டளவில் சிறிய நியாயத்தீர்ப்புகளைப் பற்றி எச்சரித்தனர், பின்னர் வரவிருக்கும் பெரிய நியாயத்தீர்ப்புகளைப் பற்றி எச்சரித்தனர். உதாரணமாக, ஏசாயா 38:1 இல் ஒரு சிறிய நியாயத்தீர்ப்பைப் பற்றி வாசிக்கிறோம்:

> நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் (ஏசாயா 38:1).

தனக்கு எதிரான ஒரு பெரிய உடன்படிக்கை நியாயத்தீர்ப்பு என்று எசேக்கியா நினைத்தார் என்று நான் நம்புகிறேன், ஆனால் முழு தேசத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, அது மிகவும் சிறியது தான். ஆனால் மறுபுறம், எசேக்கியா யெகோவாவுக்கு தன்னை ஒப்புக்கொடுக்க மறுத்த பிறகும், தாக்கும் அசீரியர்களிடமிருந்து கிடைத்த ஒரு அற்புதமான விடுதலைக்குப் பிறகும், ஏசாயா மிகவும் கடுமையான நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார். ஒருநாள் பாபிலோனியர்கள் யூதா தேசம் முழுவதையும் கைப்பற்றுவார்கள் என்று அவர் அறிவித்தார். யாத்திராகமம் 39:6 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும் (ஏசாயா 39:6).

இந்த அறிக்கை எசேக்கியாவின் தனிப்பட்ட ஆரோக்கியத்தைப் பற்றி அவருக்கு எதிராக விடுத்த அச்சுறுத்தலை விட மிகவும் கடுமையானதாக இருந்தது. இது முழு தேசத்திற்கும் எதிரான அச்சுறுத்தலாக இருந்தது. பல தீர்க்கதரிசிகளும் இதே முறையைப் பின்பற்றுவார்கள். அவர்கள் தீர்ப்புகளை அதிகரிப்பதைப் பற்றி பேசுவார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் உடன்படிக்கை நியாயத்தீர்ப்புகளை பொறுமையுடனும் அதிக தீவிரத்துடனும் கொண்டு வந்ததை நாம் காண்கிறோம், ஆனால் நியாயத்தீர்ப்பின் உச்சக்கட்டம் தேசத்திலிருந்து நாடுகடத்தப்படுவது என்கிற மூன்றாவது கொள்கையையும் நாம் காண்கிறோம்.

## குறிப்பிட்ட இறுதிக்கட்டம்

லேவியராகமம் 26:27-39 இன் கடைசி பகுதி, தேவனுடைய மக்களுக்கு எதிராக வரவிருக்கும் மிக மோசமான தீர்ப்பு தேசத்தை முற்றிலும் அழிப்பது மற்றும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திலிருந்து நாடுகடத்தப்படுவதாக இருக்கும் என்று எச்சரிக்கிறது. உபாகமம் 26:33 இல் மோசே இதைக் கூறின விதத்தை கவனிக்கவும்:

> ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும் (லேவி 26:33).

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளின் மனதில், இதை விட மோசமான எதையும் கற்பனை செய்வது கடினம். தேவன் இஸ்ரவேலை வாக்குத்தத்தம் செய்த தேசமான, பாலும் தேனும் ஓடும் ஒரு தேசத்திற்கு கொண்டு வந்திருந்தார், இந்த தேசத்திலிருந்து அவர்கள் நாடுகடத்தப்படப் போகிறார்கள் என்று தீர்க்கதரிசிகள் அறிவித்தனர். பெரும்பாலான வேதாகம தீர்க்கதரிசிகளுக்கு நாம் வரும் நேரத்தில், தேவன் தம்முடைய ஜனங்களை தேசத்திலிருந்து அனுப்பப் போகிறார் என்று ஏற்கனவே மீண்டும் மீண்டும் எச்சரித்திருந்தார். எனவே சிறையிருப்பு வருவதாக தீர்க்கதரிசிகள் அறிவிப்பதை நாம் காண்கிறோம். உதாரணமாக, ஆமோஸ் 5:26-27-ல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> நீங்கள் உங்களுக்கு உண்டாக்கின மோளோகுடைய கூடாரத்தையும், உங்கள் தேவர்களின் நட்சத்திர ராசியாகிய உங்கள் சொரூபங்களின் சப்பரத்தையும் சுமந்துகொண்டுவந்தீர்களே. ஆகையால் உங்களைத் தமஸ்குவுக்கு அப்பாலே குடியோட்டுவேன் என்று சேனைகளுடைய தேவன் என்னும் நாமமுள்ள கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோஸ் 5:26-27).

லேவியராகமம் 26 மற்றும் பல பத்திகளில் மோசே நாடுகடத்தப்படுவதற்கான அச்சுறுத்தலை மிகவும் தெளிவுபடுத்தியிருந்தாலும், இஸ்ரவேல் மக்கள் அதை நம்பவில்லை. தேவன் தம்முடைய ஜனங்களை ஒருபோதும் முற்றிலுமாக விரட்டமாட்டார் என்று நம்புவது பிரபலமாக இருந்தது. குறைந்தபட்சம் எருசலேமிற்கு ஒன்றும் ஆகாது என்கிற நம்பிக்கை இருந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கர்த்தருடனான தங்கள் உடன்படிக்கை மனித பொறுப்பை உள்ளடக்கியது என்பதை மக்கள் மறந்துவிட்டனர், அதனால்தான் எருசலேமினுடைய பாதுகாப்பின் கடைசி ஆண்டுகளில்கூட, நகரம் மற்றும் ஆலயத்தின் அழிவு வரப்போகிறது என்று எரேமியா அறிவிக்க வேண்டியிருந்தது. எரேமியா 7:13-15 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிவந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனபடியினால், என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன். நான் உங்களுடைய எல்லாச் சகோதரருமாகிய எப்பிராயீம் சந்ததி அனைத்தையும் தள்ளிப்போட்டதுபோல, உங்களையும் என் முகத்தைவிட்டுத் தள்ளிப்போடுவேன் (எரேமியா 7:13-15).

நிச்சயமாக தேவன் தம் மக்கள் மீது இரக்கமும், பொறுமையும், கருணையும் உள்ளவராக இருக்கிறார்; அவரை கோபப்படுத்த நீண்ட நேரம் எடுக்கும், ஆனால் அவர் கோபத்திற்கு தூண்டப்படலாம். ஆகவே, தேவன் தம்முடைய ஜனங்கள் மீது நியாயத்தீர்ப்பை வைத்திருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம், ஆனால் அவர் தம்முடைய ஜனங்கள் மீது பொறுமையான மற்றும் கனிவான தீர்ப்பையே வழங்குகிறார்.

உடன்படிக்கைகளின் இயக்கவியல் பற்றிய நமது ஆய்வில், இதுவரை உடன்படிக்கை இலட்சியத்தின் இரண்டு பக்கங்களையும் பார்த்தோம். இப்போது நமது விவாதத்தின் உடன்படிக்கை ஆசீர்வாதங்கள் என்கிற மூன்றாவது அம்சத்தைப் பார்ப்போம். தேவன் எவ்வாறு தம்முடைய ஜனங்கள் மீது தமது ஆசீர்வாதங்களை ஊற்றுகிறார்?

# உடன்படிக்கை ஆசீர்வாதங்கள்

நீங்கள் எப்போதாவது உங்களை விடமுடியாத ஒருவரின் நட்பில் இருந்திருக்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் வெகுதூரம் சென்றிருக்கலாம், நீங்கள் பதிலளிக்க மறந்த பிறகும் கடிதங்கள் வந்துகொண்டே இருக்கும், அல்லது உங்களது உண்மையான நண்பனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரும். வரலாறு முழுவதும் உங்களுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் இது போன்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நண்பர்களைக் கொண்டிருப்பது நல்லது. கர்த்தருக்கும் இஸ்ரவேலுடனான அவரது உறவிலும் இதுவே உண்மையாக இருந்தது. தேவன் தம்முடைய ஜனங்களை கடுமையாக நியாயந்தீர்ப்பார் என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தார்கள், ஆனால் கர்த்தர் தம்முடைய உடன்படிக்கை ஜனங்களை ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதையும் அவர்கள் அறிந்திருந்து, அதை அறிவித்தார்கள்.

உடன்படிக்கை வாழ்க்கையின் இந்தப் பக்கத்தை ஆராய, நியாயத்தீர்ப்பின் ஆய்வில் நாம் செய்ததைப் போலவே, இரண்டு பரிசீலனைகளை நாம் பார்க்க வேண்டும். முதலில், உடன்படிக்கை ஆசீர்வாதத்தின் வகைகளைப் பார்ப்போம், பின்னர் உடன்படிக்கை ஆசீர்வாதத்தின் செயல்முறையைப் பார்ப்போம்.

# ஆசீர்வாதங்களின் வகைகள்

தேவனுடைய ஜனங்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க நாடும்போது ஆசீர்வாதங்கள் வருகின்றன. நிச்சயமாகவே, தம்முடைய ஜனங்கள் பரிபூரணராக இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அவர்கள் தம்மைத் தீவிரமாகத் தேட வேண்டுமென்றும், தனக்கு எதிராகக் கலகம் செய்யாதபடி இருக்கவும் அவர் எதிர்பார்க்கிறார். உடன்படிக்கையின் ஜனங்கள் இந்த வழியில் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, தேவன் அவர்களை நிறைவாக ஆசீர்வதித்தார்.

## இயற்கையில் ஆசீர்வாதம்

ஆசீர்வாதத்தின் முதல் வகை இயற்கையில் உள்ள ஆசீர்வாதமாகும். இயற்கையில் நியாயத்தீர்ப்பைப் பற்றி மோசே பேசியதைப் போலவே, இயற்கை மண்டலத்தில் வரவிருக்கும் ஆசீர்வாதத்தையும் அவர் பேசினார். இஸ்ரவேலர்கள் தன்னை உண்மையாக சேவித்தால் மட்டுமே தேவன் மிகப்பெரிய இயற்கை ஆசீர்வாதங்களை வழங்குவார் என்று மோசே இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தினார். உபாகமம் 4,28,30 மற்றும் லேவியராகமம் 26 ஆகியவற்றில் இந்த வகையான மையக்கருத்து குறைந்தது நான்கு வழிகளில் தோன்றுகிறது. முதலாவதாக, மோசே விவசாயம் செழிப்பாக இருப்பதைப் பற்றிப் பேசினார். ஜனங்கள் தங்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால் வயல்களில் விளைச்சல் நிறைந்திருக்கும். மேலும், கால்நடைகள் பெருகும் என்று அவர் பேசுகிறார். ஜனங்கள் கர்த்தருக்கு உண்மையாக சேவை செய்தால் கால்நடைகள் அதிக எண்ணிக்கையில் வளரும். தேவனுடைய ஜனங்களுக்கு ஆரோக்கியமும் செழிப்பும் வரும். அவர்கள் பொது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை அனுபவிப்பார்கள், இது தவிர, மக்கள் தொகை அதிகரிக்கும். வாக்குத்தத்தம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பண்ணப்பட்ட தேசத்தை இஸ்ரவேலர்கள் நிரப்புவதற்காக அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகும்.

இயற்கையில் ஆசீர்வாதங்கள் பற்றிய அறிவிப்புகள் நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. தேவன் முதன்முதலில் மனிதனை உருவாக்கியபோது, அவர் நம்மை பரதீசுவாகிய ஏதேன் தோட்டத்தில் வைத்தார். ஆனால் தேவன் பாவத்தினிமித்தம் நம்மை வெளியே துரத்தினார். தேவனுடைய உடன்படிக்கையின் ஜனங்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது, இயற்கையின் ஆசீர்வாதங்களை அவர்களுக்கு வழங்குவதாக அவர் வாக்குறுதி அளிக்கிறார், இதனால் ஆரம்பத்திலேயே மனித இனத்திற்கு தேவன் உணர்த்திய காரியங்களை அவர்கள் அனுபவிக்க முடிந்தது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இயற்கை அருட்கொடையின் ஆசீர்வாதங்களைப் பற்றி பல வழிகளில் பேசினர். ஒரு உதாரணத்தை கவனிக்கவும். யோவேல் 2:22-23 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> வெளியின் மிருகங்களே, பயப்படாதேயுங்கள்; வனாந்தரத்திலே மேய்ச்சல்கள் உண்டாகும்; விருட்சங்கள் காய்களைக் காய்க்கும்; அத்திமரமும் திராட்சச்செடியும் பலனைத்தரும். சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார் (யோவேல் 2:22-23).

அதேபோல், சகரியாவும் தன் நாளில் வாழ்ந்த ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் காண்பார்கள் என்று முன்னறிவித்தார். சகரியா 8:12 இந்த வார்த்தைகளைச் சொல்கிறது:

> விதைப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும்; திராட்சச்செடி தன் கனியைத் தரும்; பூமி தன் பலனைத் தரும்; வானம் தன் பனியைத் தரும்; இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன் (சகரியா 8:12).

## போரில் ஆசீர்வாதம்

முதல் வகை உடன்படிக்கை ஆசீர்வாதங்கள் இயற்கை ஆசீர்வாதத்தில் கவனம் செலுத்தினாலும், இரண்டாவது பெரிய வகை தீர்க்கதரிசன புத்தகங்களில் மீண்டும் மீண்டும் தோன்றுகிறது, இது போரில் பெறுகிற ஆசீர்வாதமாகும். உடன்படிக்கையின் ஜனங்கள் தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயத்தீர்ப்பின் கீழ் இருந்தபோது போரில் தோல்வியை அனுபவித்ததைப் போலவே, அவர்கள் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களின் கீழ் இருந்தபோது வெற்றியையும் சமாதானத்தையும் அனுபவித்தார்கள். உபாகமம் 4,28,30 மற்றும் லேவியராகமம் 26 ஆகியவற்றில் இந்த மையக்கருத்து குறைந்தது நான்கு வழிகளில் தோன்றுகிறது. முதலாவதாக, மோசே தேவனுடைய ஜனங்களிடம், அவர்கள் தங்கள் எதிரிகளைத் தோற்கடிப்பார்கள் என்று கூறுகிறார். ஆனால் இதைத் தாண்டி, போர் முடிவுக்கு வரும்; தேசங்களோடு பகைமை ஒழிந்து, எல்லா அழிவிலிருந்தும் விடுதலை இருக்கும் என்கிறார். மேலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் திரும்பி வருவார்கள் என்பது உண்மைதான்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் போரில் இந்த வகையான ஆசீர்வாதங்களைப் பற்றி அடிக்கடி பேசினர். இஸ்ரவேல் தேசத்தின் இராணுவ வெற்றியின் மகத்தான எதிர்காலத்தை ஆமோஸ் எவ்வாறு முன்னறிவித்தார் என்பதை கவனிக்கவும். ஆமோஸ் 9:11-12 இல், அவர் நாடுகடத்தலுக்குப் பிந்தைய காலத்தைப் பற்றி இந்த வார்த்தைகளைச் சொன்னார்:

> அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் (ஆமோஸ் 9:11-12).

பகைமைகளும் தொல்லைகளும் நிறைந்த உலகில், தாவீதின் குடும்பத்தார் எல்லா விரோத எதிரிகளையும் வெல்வார்கள் என்று ஆமோஸ் தீர்க்கதரிசி அறிவித்தார். அதே போல, மீகா 4:3 இந்த வெற்றிகளின் விளைவாக மிகுந்த சமாதானம் இருக்கும் என்று அறிவித்தார்:

> அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (மீகா 4:3).

எனவே, தீர்க்கதரிசிகள் தேவனுடைய கிருபை மற்றும் ஆசீர்வாதங்களை நோக்கி இருந்தனர் என்பதை இந்த வசனங்களிலிருந்து நாம் காணலாம். தீர்க்கதரிசிகள் நியாயத்தீர்ப்பு மற்றும் பாவத்தைப் பற்றி எதிர்மறையாகச் சொல்ல நிறைய இருந்தபோதிலும், மனந்திரும்புதலும் விசுவாசமும் இயற்கையிலும் போரிலும் பெரும் ஆசீர்வாதங்களுக்கு வழிவகுக்கும் என்றும் தீர்க்கதரிசிகள் கூறினர்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொண்டுவரப்போகும் ஆசீர்வாதங்களின் வகைகளை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்கள் வரவிருக்கும் செயல்முறைகளையும் நாம் கவனிக்க வேண்டும்.

## ஆசீர்வாதங்களின் செயல்முறை

நியாயத்தீர்ப்பின் செயல்முறை இருந்ததைப் போலவே, ஆசீர்வாதத்தின் செயல்முறையும் உள்ளது. தெய்வீக ஆசீர்வாதத்தின் செயல்முறையை நிர்வகிக்கும் குறைந்தது மூன்று கொள்கைகள் உள்ளன; அவையாவன: முதலாவதாக, ஆசீர்வாதங்கள் கிருபையின் மூலம் வருகின்றன; பின்னர் ஆசீர்வாதங்கள் பல்வேறு அளவுகளில் வருகின்றன; மற்றும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் உச்சக்கட்டம்.

### கிருபை

பெரும்பாலும், நவீன கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்கள் இரட்சிப்பை சம்பாதித்தார்கள் அல்லது தேவனுக்கு முன்பாக தங்கள் நீதியை சம்பாதித்தார்கள் என்ற தவறான எண்ணத்தை கொண்டுள்ளனர். ஆனால் உண்மைக்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. தீர்க்கதரிசிகள் யாருக்கும் கிரியைகள் மூலம் இரட்சிப்பின் வழியை வழங்கவில்லை. மனந்திரும்பவும், தேவனுடைய கருணையை நாடவும் அவர்கள் மக்களை அழைத்தனர். ஓசியா 14:1-2 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம் (ஓசியா 14:1-2).

தம்முடைய வாசகர்கள் கடினமாக உழைத்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும் என்று ஓசியா சொல்லவில்லை என்பதைக் கவனிக்கவும். மாறாக, தேவனுடைய இரக்கம் மட்டுமே ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்பதை இஸ்ரவேலிலிருந்த விசுவாசிகள் அறிந்திருந்தார்கள். அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் இல்லாமல் உடன்படிக்கை ஆசீர்வாதத்தின் அடிப்படையாக அவர்கள் மன்னிப்பைத் தேடினார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அளவுகள்

உடன்படிக்கை ஆசீர்வாதங்களை நிர்வகிக்கும் இரண்டாவது கொள்கை என்னவென்றால், அவை மாறுபட்ட அளவுகளில் வருகின்றன. நியாயத்தீர்ப்புகள் படிப்படியாக வந்ததைப் போலவே, குறைந்த மற்றும் பெரிய ஆசீர்வாதங்களைப் பற்றி நாம் பேசலாம். தராசின் கீழ் முனையில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து வருகிற சிறிய இரக்கங்களைப் பற்றி பேசினர். உதாரணமாக, எசேக்கியா நோய்வாய்ப்பட்டு சாகப் போகிறார் என்று ஏசாயா சொன்னது போலவே, தேவன் அவரின் வாழ்நாளை நீட்டிப்பார் என்று ராஜாவிடம் சொன்னபோது அவருக்கு ஒரு சிறிய ஆசீர்வாதத்தையும் அறிவித்தார். ஏசாயா 38:5 இல் தேவன் இவ்வாறு சொன்னார்:

> நீ போய் எசேக்கியாவை நோக்கி: ”உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்” (ஏசாயா 38:5).

அநேக எண்ணிக்கையிலான தீர்க்கதரிசனங்கள் இந்த தனிப்பட்ட அல்லது தனிப்பட்ட வகையான ஆசீர்வாதங்களில் கவனம் செலுத்துகின்றன. ஆனால் பல சமயங்களில், தீர்க்கதரிசிகள் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொண்டுவரப்போகிற பெரிய தேசிய ஆசீர்வாதங்களிடமாகவும் தங்கள் கவனத்தைத் திருப்பினர். உதாரணமாக, 701 இல் அசீரியர்கள் யூதாவைத் தாக்கி எருசலேமின் வாசல்களுக்கு நேராக வந்தனர். ஏசாயா 37:34-35 இல், தேவன் இந்த மாபெரும் தோல்வியிலிருந்து ஜனங்களை விடுவிப்பார் என்று தீர்க்கதரிசி தெளிவாக அறிவித்தார்:

> ”அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான். என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார்” (ஏசாயா 37:34-35).

இது தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருந்தது, ஏனென்றால் அவர்களுடைய இருப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளானது, மேலும் போரில் வெற்றியின் ஆசீர்வாதத்தை அவர்களுக்கு வழங்குவதாக தேவன் சொன்னார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களை நாம் வாசிக்கும்போது, தேவன் தம்முடைய உடன்படிக்கையின் மக்களுக்கு அறிவித்த சிறிய மற்றும் பெரிய ஆசீர்வாதங்களைக் குறித்து நாம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இறுதிக்கட்டம்

தெய்வீக கிருபை மற்றும் ஆசீர்வாதத்தின் அளவுகளுக்கு கூடுதலாக, மீதியானவர்களின் மறுசீரமைப்பின் இறுதிக்கட்டம் என்கிற மூன்றாவது கொள்கை உடன்படிக்கை ஆசீர்வாதங்களை நிர்வகிக்கிறது. எவ்வளவு பெரிய நியாயத்தீர்ப்பு வந்தாலும், எப்போதும் ஒரு மீதியானவர்கள் இருப்பார்கள் என்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நம்பினர். இந்த மீதியானவர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையாக இருக்கலாம் அல்லது மக்கள் எவ்வாறு பதிலளித்தார்கள் என்பதைப் பொறுத்து மிகச் சிறியதாக இருக்கலாம். ஆனால் தீர்க்கதரிசிகள் எப்போதும் தேவன் மீதியானவர்களை பாதுகாப்பாக வைத்திருப்பார் என்றும், அந்த மீதியானவர்களை கட்டியெழுப்புவார் என்றும் சொன்னார்கள். உதாரணமாக, எருசலேம் முற்றிலும் அழிக்கப்படும் என்று எரேமியா கூறினார், ஆனால் எரேமியா 5:18 இல், மீதியானவர்கள் தப்பிப்பிழைப்பார்கள் என்று அவர் மக்களுக்கு உறுதியளிக்கிறார்:

> “ஆகிலும் நான் அந்நாட்களிலும் உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரேமியா 5:18).

மீதியானோர் தப்பிப்பிழைப்பது முக்கியமானது, ஏனென்றால் மீதியானோர் மூலமாகவே தேவன் தம்முடைய ஜனங்களுக்கு எல்லாவற்றிலும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதாக வாக்குறுதியளித்தார்.

லேவியராகமம் 26 இல் மிக மோசமான உடன்படிக்கை சாபம் தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டது என்று பார்த்தோம். ஆனால் லேவியராகமம் 26:40-45, உபாகமம் 4 மற்றும் உபாகமம் 30 ஆகியவற்றில், அவர் ஒரு மீதியானவர்களைப் பாதுகாப்பதாகவும், அந்த மீதியானவர்களை தேசத்திற்குத் திரும்பக் கொண்டுவருவதாகவும், முன்பை விட அதிகமாக அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் தேவன் வாக்குறுதி அளித்தார். உபாகமம் 30:4-5 இல் மோசே இதைக் கூறின விதத்தை கவனிக்கவும்:

> உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து, உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார் (உபா 30:4-5).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மீதியானவர்களுடைய மறுசீரமைப்பின் இந்த கருப்பொருள் தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதும் தோன்றுகிறது. உதாரணமாக, நாடுகடத்தப்பட்ட பின்பு தேவன் தம்முடைய மீதியானோருக்கு மிகுந்த இயல்பான ஆசீர்வாதங்களைக் கொடுப்பார் என்று எரேமியா கற்பித்தார். எரேமியா 23:3 இல், எரேமியா தேவனிடமிருந்து இந்த வார்த்தைகளை அறிவித்தார்:

> நான் என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்த்து, அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டுவருவேன்; அப்பொழுது அவைகள் பலுகிப்பெருகும் (எரே 23:3).

அதேவிதமாகவே, நாடுகடத்தப்பட்ட பின்பு, மீதியானோரும் போரில் ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். தேவனுடைய ஜனங்கள் திரும்பி வரும்போது, இந்த மீதியானவர்கள் ஒரு பெரிய வெற்றியையும் நிலையான சமாதானத்தையும் அனுபவிப்பார்கள் என்று தீர்க்கதரிசி யோவேல் போதித்தார். யோவேல் 3:9 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள் (யோவேல் 3:9).

ஆனால் 3:17 இல் இஸ்ரவேலின் வெற்றியைப் பற்றி வாசிக்கிறோம்:

> என் பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே வாசமாயிருக்கிற நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்; அப்பொழுது எருசலேம் பரிசுத்தமாயிருக்கும்; அந்நியர் இனி அதைக் கடந்துபோவதில்லை (யோவேல் 3:17).

இஸ்ரேல் என்றென்றும் பாதுகாப்பாக நிலைநிறுத்தப்படும் போரில் ஒரு பெரிய வெற்றியைப் பற்றி யோவேல் பேசினார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அனைவரும் தேவனுடைய ஜனங்களில் மீதியானவர்கள் திரும்ப நிலைநாட்டப்படுவதை எதிர்பார்த்திருந்தனர். நாடுகடத்தப்படுதல் என்ற மிகப் பெரிய தண்டனை இருந்தபோதிலும், மீதியானவர்கள் திரும்ப நிலைநாட்டப்படும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று தேவன் வாக்குக் கொடுத்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

இந்த பாடத்தில் தீர்க்கதரிசிகள் உடன்படிக்கைகளின் இயக்கவியலை எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதை ஆராய்ந்தோம், மேலும் மூன்று முக்கிய தலைப்புகளை நாம் பார்த்தோம்: முதலாவதாக, தெய்வீக கருணை மற்றும் மனித பொறுப்பின் இலட்சியங்களைப் பார்த்தோம். பின்னர் தீர்க்கதரிசிகள் ஒரு தனிப்பட்ட மட்டத்திலிருந்து தேசிய நாடுகடத்தலின் மகத்தான தீர்ப்பு வரை எவ்வாறு எச்சரித்தார்கள் என்பதையும் பார்த்தோம். பின்னர் இறுதியாக, தேவன் தம்முடைய ஜனங்களை சிறிய வழிகளிலும், பின்னர் ஒரு மீதியானவர்கள் மூலமாகவும், நாடுகடத்தலுக்குப் பிறகு ஒரு பெரிய மறுசீரமைப்பைக் கொண்டுவருவார் என்பதையும் நாம் பார்த்தோம். இந்த கருப்பொருள்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை அவர்கள் சொன்ன அனைத்திலும் வழிநடத்தியது, மேலும் இந்த கருப்பொருள்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனப் புத்தகங்களைப் படிக்கும்போது நம்மையும் வழிநடத்த வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.